

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி விக்கிரவாண்டி வட்டம் வாக்கூர் அருகே உள்ள எரிச்சனாம்பாளையம் கிராமத்தில் சாலை விபத்தில் பலியான காவலர் குடும்பத்திற்கு ரூ.25 இலட்சம் நிதியுதவிக்கான காசோலை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் சி பழனி, மாவட்ட எஸ்.பி தீபக் ஸ்வாச் , சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் ஜெய.ரவிதுரை, ஒன்றிய குழு தலைவர் சங்கீத அரசி, ரவி துரை உள்ளிட்ட கழகத்தினர், அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; ஒன்றிய பா.ஜ.க. அரசின் “ஆயுஷ்மான் பாரத் திட்டம்” வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறதே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; “ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம் “ என்று பாடினான் மகாகவி பாரதி!**

**அதையே இவர்கள், வெற்று ஆரவாரம் செய்வோம்; வீண் காகிதத் திட்டங்களையே செய்வோம் - என்று மாற்றிக் கொண்டுவிட்டார்களோ!**

# திருநெல்வேலி கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை



நெல்லை, நவ.3-

திருநெல்வேலி கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம், நாங்குநேரி, இராதாபுரம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர்களுடன் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

நாள்,கூட்டம் நடைபெறும் சட்டமன்ற தொகுதி, இடம் விவரம் வருமாறு:-

04.11.2024 - காலை 10 மணி - அம்பாசமுத்திரம் தொகுதி- அம்பாசமுத்திரம் ஒன்றிய கழக

அலுவலகம் விக்கிரமசிங்கபுரம், 04.11.2024 - மாலை 4 மணி- நாங்குநேரி தொகுதி - நாங்குநேரி மேற்கு ஒன்றிய அலுவலகம்,

04.11.2024 - மாலை 6 மணி-இராதாபுரம் தொகுதி -M.S. மஹால் வள்ளியூர்

மேற்படி பட்டியலில் உள்ளவாறு மாவட்ட, மாநில அணி நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அந்தந்த தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் பணி:

# திருச்சி - மத்திய - வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்

## மாவட்டச் செயலாளர்கள் க. வைரமணி - ந. தியாகராஜன் வேண்டுகோள்!





திருச்சி, நவ.3-

திருச்சி மத்திய, மாவட்ட தி.மு.க. செயலாளர் க. வைரமணி, வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ந. தியாகராஜன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

1.01.2025 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதியன்று 18 வயது பூர்த்தியடையக் கூடிய புதிய வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி ஏற்படும் நாளாக கொண்டு இந்திய தேர்தல் ஆணையம் வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளது. மேலும், வாக்காளர்களை சேர்ப்பதற்கும், நீக்குவதற்கும், திருத்தம் செய்திடவும் சிறப்பு முகாம்கள் 16.11.2024, 17.11.2024 சனி, ஞாயிறு மற்றும் 23.11.2024, 24.11.2024 சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் அனைத்து வாக்குசாவடி மையங்களிலும் நடைபெற இருக்கிறது.

இந்தப் பணிகளில் மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பாக பணியாற்றிட வேண்டுகிறோம். இந்தபணிகளில் வாக்குசாவடி நிலைய முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி அளவிலான குழு உறுப்பினர்கள் (BLC) அனைவரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ள வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. – ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. – அமலு விஜயன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# வேலூர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை! தி.அ. முகமது சகி தலைமை!

வேலூர், நவ. 3-

வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமை தாங்கினார்.

அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்எல்ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் டாக்டர் வீ.எஸ்.விஜய், மற்றும் ஒன்றிய, நகர,பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் துணை முதலமைச்சராக பொறுப்பேற்ற உதயநிதி ஸ்டாலினுக்கு வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவிப்பது, இந்த நல்ல வாய்ப்பு வழங்கிய கழக தலைவரும் முதலமைச்சருமான மு .க .ஸ்டாலின், பொதுச் செயலாளரும் நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பது எனவும், முரசொலி செல்வம் அவர்கள் மறைவுக்கு இரங்கல் தெரிவிப்பது, வரைவு வாக்காளர் பட்டியலை மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்கழக செயலாளர்கள் பெற்று கொண்டு கட்சி நிர்வாகிகளுக்கு வழங்கிபூத் வாரியாக சரி பார்ப்புபணிகளை மேற்கொள்ள

வேண்டும்எனவும், வருகிற 2026ஆம்ஆண்டு சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. 200தொகுதிகளை கைப்பற்றிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது .

அதன்படி வேலூர் மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளுக்கும் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் நிர்வாகிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொள்வார்கள். வாக்குச்சாவடி மைய முகவர்களாக மாவட்ட திமுக வால் நியமிக்கப்பட்டவர்கள் சிறப்பு கவனம் செலுத்தி பணியாற்ற வேண்டும்.

தகுதிவாய்ந்த புதிய இளம் வாக்காளர்களை தி.மு.க.வினர் சேர்க்க வேண்டும் எனவும் மற்றும் பல்வேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

### சென்னை திரும்பும் மக்களுக்காக

# காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே சிறப்பு ரெயில்!

## நவ. 4-ஆம் தேதி வரை விடப்படுகிறது!!

சென்னை, நவ.3-

சென்னை திரும்பி வரும் மக்களின் வசதிக்காக காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே 4-ஆம் தேதி சிறப்பு ரெயில் இயக்கப்படும் என ரெயில்வே இலாகா அறிவித்துள்ளது.

தீபாவளியை கொண்டாடுவதற்காக சென்னையில் இருந்து 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளார்கள். இவர்களுக்காக அரசுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

மேலும் தனியார் ஆம்னி பஸ்களும் அதிக அளவில் விடப்பட்டன. ரெயில்களிலும் ஏராளமான மக்கள் சென்றார்கள்.

இன்று முதல் 4-ஆம் தேதி வரை சிறப்பு பஸ்களும் இயக்கப்படுகின்றன. வழக்கமான பஸ்களும் இயங்கும். இந்த 3 நாட்களில் மொத்தம் 12,848 பஸ்கள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

சென்னைக்கு வரக்கூடிய பஸ்கள் அனைத்தும் கிளாம்பாக்கத்துடன் நிறுத்தப்படும். அங்கிருந்து மாற்று வாகனம் பிடித்து பயணிகள் சென்னை நகருக்குள் வருவார்கள்.

இவர்களுக்காக மாநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால் இது போதுமானதாக இருக்காது. குறிப்பாக ஞாயிற்றுக்கிழமை மக்கள் அதிக அளவில் புறப்பட்டு திங்கட்கிழமை காலையில் சென்னைக்கு வருவார்கள்.

இவர்களின் நலன் கருதி ரெயில்வே துறை சார்பில் சிறப்பு மின்சார ரெயில்கள் விடப்படுகின்றன. பொதுவாக சென்னை கடற்கரை - தாம்பரம் இடையே அதிக அளவில் மின்சார ரெயில்கள் இயக்கப்படுகின்றன. அதைவிட சற்று குறைந்த அளவில் கடற்கரை - செங்கல்பட்டு இடையே இயக்கப்படுகின்றன.

கிளாம்பாக்கம் பஸ் முனையம் வண்டலூருக்கும், ஊரப்பாக்கம் ரெயில் நிலையத்துக்கும் இடையே அமைந்துள்ளது. கிளாம்பாக்கத்தில் இறங்கும் பயணிகள் சற்று தூரம் நடந்து சென்றுதான் இந்த ரெயில் நிலையங்களை அடைய முடியும்.

ஆகவே கிளாம்பாக்கத்தை அடையும் முன்னரே காட்டாங்கொளத்தூர், பொத்தேரி, கூடுவாஞ்சேரி ஆகிய இடங்களில் மக்கள் இறங்கிக் கொள்வார்கள். அவர்களின் நலன் கருதி நவம்பர் 4-ஆம் தேதி அன்று காட்டாங்கொளத்தூர் - தாம்பரம் இடையே சிறப்பு மின்சார ரெயில்கள் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை 4.30, 5.00, 5.45, 6.20 ஆகிய மணி நேரத்தில் காட்டாங்கொளத்தூரில் இருந்து சிறப்பு ரெயில்கள் புறப்படும். இந்த ரெயில் பொத்தேரி, கூடுவாஞ்சேரி, ஊரப்பாக்கம், வண்டலூர், பெருங்களத்தூர் ஆகிய ரெயில் நிலையங் களில் நின்று செல்லும்.

அதுபோல் தாம்பரத்தில் இருந்து 5.05, 5.40 ஆகிய மணி நேரத்தில் 2 சிறப்பு ரெயில்கள் காட்டாங்கொளத்தூர் வரை இயக்கப்படும்.

### ரயில்களில் முன்பதிவுக்கான

# கால அவகாசம் 60 நாட்களாக குறைப்பு!

## புதிய விதிமுறை அமலுக்கு வந்ததாக ரயில்வே நிர்வாகம் அறிவிப்பு!

சென்னை,நவ.3-

ரயில்களில் முன்பதிவுக்கான கால அவகாசம் 60 நாட்களாக குறைக்கும் நடைமுறை அமலுக்கு வந்துள்ளது.

ரயில்களில் பண்டிகை காலம் தொடங்கி சாதாரண ரிசர்வேஷன் வரை அனைத்திற்கும் 120 நாட்கள் முன்னரே பதிவு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டு வந்தன. இனி, 60 நாட்கள் முன்கூட்டி மட்டுமே ரயில் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ள முடியும். இந்த புதிய விதிமுறை இன்று முதல் வந்துள்ளதாக ரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதற்கு முன்னதாக 120 நாள் முன்கூட்டியே ரயில் டிக்கெட் புக் செய்திருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. நேற்று வரை முன்பதிவு செய்யப்பட்ட, 60 நாட்களுக்கு மேலான ரயில் டிக்கெட்டுகளை ரத்து செய்ய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

ரயில் டிக்கெட் முன்பதிவு அவகாசம் 60 நாட்களாக குறைப்பு

ரயில்களில் பண்டிகை காலம் தொடங்கி சாதாரண ரிசர்வேஷன் வரை

அனைத்திற்கும் 120 நாட்கள் முன்னரே பதிவு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டு வந்தன

இனி, 60 நாட்கள் முன்கூட்டி மட்டுமே ரயில் டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ள முடியும் இந்த புதிய விதிமுறை இன்று முதல் வந்துள்ளது இதற்கு முன்னதாக 120 நாள் முன்கூட்டிய ரயில் டிக்கெட் புக் செய்திருப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது நேற்று முன்தினம் வரை முன்பதிவு செய்யப்பட்ட, 60 நாட்களுக்கு மேலான ரயில் டிக்கெட்டுகளை ரத்து செய்ய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

### வணிகப் பயன்பாட்டிற்கான

# சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு!

சென்னை,நவ.3-

வணிகப் பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 61 ரூபாய் 50 காசுகள் உயர்ந்துள்ளது.

சர்வதேச சந்தையில் நிலவும் கச்சா எண்ணெய் விலைக்கு ஏற்ப, சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயித்து வருகின்றன. அந்த வகையில் ஒவ்வொரு மாதமும் 1ம் தேதி எண்ணெய் நிறுவனங்கள் புதிய விலையை நிர்ணயித்து அறிவிக்கின்றன. அதன்படி, இந்த மாதத்திற்கான விலை மாற்றம் குறித்த பட்டியலில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி

சென்னையில் வர்த்தக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் விலை 61 ரூபாய் 50 காசுகள் அதிரடியாக உயர்ந்து ஆயிரத்து 964 ரூபாய் 50 காசுகளாக விற்பனை செய்யப்படுகிறது. 14 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு எந்த மாற்றமும் இல்லாமல் 818 ரூபாய் 50 காசுகளுக்கு விற்பனை யாகிறது.



மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆலோசனையின்படி தெற்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் செல்வேந்திரன் தூய்மை பணியாளர்கள், கழக முன்னோடிகள், கழகத்தினர், பொதுமக்கள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு மரக்கன்றுகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் சாதுராஜன், கழகத்தினர், பொதுமக்கள் உள்ளனர்.

### தருமபுரி கிழக்கு மாவட்டம் - நல்லம்பள்ளி மத்திய ஒன்றிய

# பி.எல்.ஏ.-2 - பி.எல்.சி. - கிளைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்பிரமணி அறிவிப்பு!



தருமபுரி, நவ. 3-

தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்பிரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைபடி தருமபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி மத்திய ஒன்றியம் ஊராட்சி வாரியாக பி.எல்.ஏ.-2 மற்றும் கிளை கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம். பெ.சுப்ரமணி அறிவிப்பு இன்று (03.11.2024 - ஞாயிற்றுக்கிழமை) தருமபுரி கிழக்கு மாவட்டம் தருமபுரி சட்டமன்றத் தொகுதி நல்லம்பள்ளி மத்திய ஒன்றிய பி.எல்.ஏ.-2 - பி.எல்.சி. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம். பெ.சுப்பிரமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் தருமபுரி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் மருத்துவர் ஆ.கா.தருண் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

அது சமயம் நல்லம்பள்ளி மத்திய ஒன்றியம் ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பி. மல்லமுத்து ஏற்பாட்டில் 1. கம்மம்பட்டி 9.00 மணி, சோழியனூர் 2. தொப்பூர் 10.00 மணி ஞான வடிவேல் தோட்டம் 3. மானியதள்ளி 11.00 மணி கீழ்ஈசல்பட்டி 4. சாமிசெட்டிப்பட்டி 12.00 மணி சாமிசெட்டிப்பட்டி 5. ஏலகிரி 1.30 ஏலகிரி 6. டொக்குபோதனஹள்ளி மற்றும் பாளையம்புதூர் 11.00 ஒன்றிய கழக அலுவலகம் 7. பாகலஹள்ளி 12.00 மணி, சென்றாயசாமி கோயில் 8. சிவாடி 1.00 மணி, சிவாடி 9. பூதனஅள்ளி 2.00 மணி, பூதனஅள்ளி உள்ளிட்ட இடங்களில் நடைபெற உள்ள ஆலோசனைக் கூட்டத்தில் கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன். பொருள்: 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து. கிளை , பி.எல்.ஏ.-2 - பி.எல்.சி. நிர்வாகிகளுடன் ஆலோசனை. வாக்காளர் சேர்த்தல் நீக்கல் குறித்து. இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல் குறித்து கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.